# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008*, பெப்புருவரி மாதம் *29* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 68/2007

## 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. (1) இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்கும் 2008, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "கடன் அட்டை வைத்திருப்பவரால் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடன் அட்டை வைத்திருப்பவரால் ;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன் -

(2) (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஈஈ) பிரசித்த நொத்தாரிசாக செயலாற்றுவதற்கான ஆணைப்பத்திரம் ஒன்றின் விடயத்தில் நொத்தாரிசு பதவிக்கு விண்ணப்பிக்கின்ற ஆளினால்;

(ஈஈஈ) உரிமம் ஒன்றின் விடயத்தில் அதற்கு விண்ணப்பிக்கின்ற ஆளினால் ; அத்துடன்".

2-PL 002814 - 1,400 (2008/02)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினை பதிலிடுதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"முத்திரைத் தீர்வையை கொடுப்பனவு செய்யும்முறை.

8. (1) ஏழாம் பிரிவின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை ஒருங்கு கூட்டப்பட்டாற்றவிர ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வை, சாதனத்தை எழுதி நிறைவேற்றுவதற்கு முன்னர் அல்லது எழுதி நிறைவேற்றும் நேரத்தில் தேவைப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான ஒட்டுமியல்புடைய முத்திரைகளை ஒட்டுவதன்மூலம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையின் பெறுமதி, அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனத்தின் முகப்பில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும் பங்குக் கைமாற்றங்கள் அவை எழுதி நிறைவேற்றப்படுவதிலிருந்து ஒரு மாதத்தினுள் முத்திரையிடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அசையா ஆதனத்தின் ஈடு அல்லது குத்தகை ஒன்று தொடர்பில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனம் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வை விதித்துரைக்கப்பட்ட வங்கி ஒன்றுக்கு குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின் எழுதி நிறைவேற்றுவதற்கு முன்பாக அல்லது எழுதி நிறைவேற்றப்படும் நேரத்தில் செலுத்தப்படலாம். ஆயினும், எந்த ஆளினால் முத்திரைத் தீர்வை செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த ஆளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணங்களால் முத்திரைத்தீர்வை அவ்வாறு செலுத்தப்படமுடியாதுள்ளவிடத்து, அம்முத்திரைத் தீர்வையானது, அத்தகைய எழுதி நிறைவேற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களினுள் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அதன் மேல் வங்கியானது முத்திரைத் தீர்வை முறையாக செலுத்தப்பட்டுள்ளதென சான்றுறுதிப்படுத்துகின்ற

விதித்துரைக்கப்பட்ட படிவம் ஒன்றில் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழானது அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட சாதனம் ஒன்றை எழுதி நிறைவேற்றுகின்ற எவரேனுமாள் அச்சுப்பதிவு முத்திரை ஒன்றினால் முத்திரையிடப்படாத அத்தகைய குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின் எழுதி நிறைவேற்றலின்போது மீண்டும் அம் முத்திரைகள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வாயிலாக ஒவ்வொரு முத்திரையிலும் தனது பெயரை அல்லது முதல் எழுத்துக்களை எழுதுவதன்மூலம் அல்லது அதன்மீது மையினால் அடையாளமிடுவதன்மூலம் அல்லது குறுக்குக் கோடிடுவதன்மூலம் அதன் மீதான முத்திரைகளை இரத்துச்செய்தல் வேண்டும். மேலும், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட சாதனம் ஐம்பது ரூபா அல்லது மேற்பட்ட பெறுமதியுடைய ஒட்டுமியல்புடைய முத்திரை ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருக்குமிடத்து, அத்தகைய முத்திரை, அதில் உருவத்துளையிடுவதன்மூலம், ஒன்றில் வெட்டிவிடுவதன் மூலம் அல்லது பொருத்தமான சாதனம் ஒன்றினால் முத்திரையை துவாரமிடுவதன்மூலம் குறித்துரைக்கப்பட்ட சாதனத்தை எழுதி நிறைவேற்றுகின்ற ஆளினால் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் தரப்பட்ட முறையில் இரத்துச் செய்யப்படாதுள்ள ஒட்டுமியல்புடைய முத்திரை ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனம் அத்தகைய முத்திரையின் பெறுமதியின் அளவிற்கு முத்திரையிடப்படாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்